# அண்டத்தின் பேரருள்

# அரனாரின் திருவருள்

பரிதிமதி

**Prof. Dr. R. Ravichandran**
F 101, Ram Adithya Apartments,
19/6 Nagappa street, Pipeline'A' Cross
Malleswaram,
Bangalore - 560 003.
**Karnataka**

## <u>கடவுள் வாழ்த்து</u>

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

திருஞான சம்பந்தர்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணை பூட்டியும் கடலில் சாய்க்கினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே

அப்பர்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேணிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

அப்பர்

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித்துதியாதே
வீழ்த்த வாவினை யேன் நெடுங்காலமே.

அப்பர்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியில் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

சுந்தரமூர்த்தி நாயனார்

‘நமசிவாய’ என்னும் ஐந்தெழுத்தை உச்சரித்தால் பிறவிப் பெருங்கடலைக் கடக்கலாம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. நான் என்னும் சுயநலம் தவிர்த்து தில்லைப் பெருமானாம் நடராசரை வேண்டி, சோதிரூபமானவர் வள்ளலார் பெருந்தகை. அறுபத்து மூன்று நாயன்மார்கள் சிவனை வேண்டி, பிறவியறுத்து முக்திநிலையடைந்தது யாவருமறிந்த உண்மை. அண்ட உருவெளித்தோற்றத்தின் உருவகமே சிவலிங்கத்தின் பரிணாமம். ஆணுமாகிப் பெண்ணுமாகி செங்கோட்டு வெற்பில் நின்ற கோலத்தில் அர்த்தநாரீசுவரரைக் காணலாம். நீர், தீ, வானம், நிலம், காற்று என்ற ஐந்து கோலங்களில் திருஆனைக்கா, திருஅருணை, திருத்தில்லை, திருக்காஞ்சி, திருக்காளத்தி என்கின்ற திருத்தலங்களில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கிறார். மாணிக்கவாசகர் சிவபெருமானைப் புகழ்ந்து திருவாசகத்தில் தேனினுமினிய பதியங்களைப் பாடியது யாவருமறிந்ததே. திருவாசகத்திற்குருகார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்பது நிதர்சனமான உண்மை. திருவெறும்பூரில் பிப்பிலிகேசரெனும் எறும்பீசராக, திருசிரபுரத்தில் தாயுமானவாராக, திருக்காசியில் விசுவநாதராக, மதுரையில் சொக்கநாதராக, திருக்காஞ்சிபுரியில் ஏகாம்பரநாதராக, திருக்கேதாரத்தில் கேதாரநாதராக சிவபெருமான் அருள்பாலிக்கிறார். பன்னிரண்டு சோதிலிங்கங்கள் சக்திரூப இறைவனின் இருப்பிடங்களாகும். கைலாயத்தில் உள்ள இறைவனையடைய பக்தி ஒன்றே வழி; மூசு வண்டறைப் பொய்கையைப் போன்ற ஈசனடியை அடைய சில பாடல்களைப் புனைந்து சிறுமுயற்சி செய்திருக்கிறேன். கண்ணப்பநாயனாரின் பக்தியில் ஒரு பாமர வேடனின் இறையன்பைக் காண்கிறோம். அதேபோல் உள்ளன்புடன் ஒளிர்ந்தனவே இந்தப் பாடல் தொகுப்பாகும். இப்பாடல்களை தினந்தோறும் படித்து சிவபெருமானின் அருளைப் பெறவேண்டும் என்று விரும்புகிறேன்.

பரிதிமதி

## பாமாலை

1. அரனை நினைத்தால் கலிதோஷ வினையகலும்
புரமெரித்த ஈசனாம் ஆலகால விஷமருந்தியவர்
உத்தம நாதர் கீரனம்பதியில் உறைபவர்
சித்த மதில் திளைத்து நின்ற பேரருள்சோதியவர்.

2. அடிமுடி யறியாவண்ணம் அண்ணாமலைப் பரம்பொருள்
கொடுமுடியில் தீபமாக சோதிரூப சக்தியவர்
அயனவரும் மாலவரும் வேண்டிநின்ற ஈசனாம்
சயன நிலையிலிருப்பார் சுருட்டப்பள்ளித் தலத்திலே.

3. அம்மையப்பர் தேவனார் ஆதிமூலப் பரம்பொருள்
நம்மை யெல்லாம் எப்போதும் காத்து அருள்பவர்
செம்மையான சோதிசக்தி மட்டில்லா நலன்களை
மேன்மையாகத் தருபவர் ஏகாம்பர வள்ளலே.

4. அர்த்தநாரி ஈஸ்வரர் திருச்செங்கோடுத் தலத்திலே
அர்த்தமான வாழ்க்கையை செகத்திலே யருள்கிறார்
ஆணுமாகிப் பெண்ணுமாகி ஏகாந்த ரூபமாய்
மாண்புடன் விளங்குவார் சிவசக்தி ஸ்வரூபமாய்.

5. மஞ்சுநாத ஈஸ்வரன் தர்மம்மேவும் தலத்திலே
தஞ்சமடைந்த பக்தர்க்கு ஆஸ்ரயை யளித்திட
மல்லிகார்ஜுனனாகத் திருசைலப் பொருப்பிலே
சொல்லிலும் செயலிலும் செயத்தையே யளிக்கவே.

6. நந்தனார்க்கு முக்திதந்த நடராச மூர்த்தியே
பந்தமெல்லாம் அறுத்திட ஊழிநடனமாடுவார்
ஆகாசஸ்வரூபமாய் வில்வதள ரகசியமாய்
மோகமான பிறவியைத் தாவிடவே தன்மையாய்

7. சோதிலிங்க ரூபமாய் பன்னிரு தலத்திலே
பூதிமேவும் மெய்யையே ஆலிங்கனம் செய்யவே
தடுத்தாட்கொண்டது சுந்தரன் ஒருவனை
தடுத்து எமையாள அனுதினம் வருபவன்.

8. அப்புலிங்க தரிசனம் திருஆனைக்காவிலே
தொப்பமாக நனைத்திடுவார் அன்பெனும் மழையிலே
வாயுவாக மேவிநின்ற காளத்தியப்பனே
மாயமாக மேவினான் திண்ணன் வீடேறவே.

9. புட்டுக்கு மண்சுமந்த எங்கள் சோமசுந்தரம்
கட்டையான மெய்யிலே பிரம்படி சுமந்தவன்
நரியைப் பரியாக்கினார் மணி வாசகருக்காக
பரிமேலெழுந் தருளினார் கூடலம்பதி தேவராக.

10. தாயுமானார் ஈசனே செட்டியிள நங்கைக்காக
சேயுமானார் அனுசூயைமேவி விருந்தளிக்கவே
பொற்கிழிதான் கொடுத்திடவே தருமிக்கு பாட்டெழுதி
சொற்போர் தொடுத்திட்டான் நக்கீரன் புலமைக்கே.

11. திருநெல்லைதனில் காந்திமதி நெல்லையப்பராம்
திருக்காசிதனில் விசுவநாத ஈஸ்வரனாம்
திருமயிலாபுரிதனிலே கபால ஈஸ்வரனாம்
திருவேலைமாநகரில் ஜலகண்ட ஈஸ்வரனாய்

12. பிரகத்தின் ஈஸ்வரனாம் திருத்தஞ்சை நகரினிலே
மரகதத்தின் லிங்கமாம் தியாகேசன் சன்னதியில்
வேதபுரி ஈஸ்வரனாய் திருக்கழுகாசலத்தினிலே
பொதிகைமலை முகட்டினிலே குற்றால நாதனாய்.

13. உன்னருமைத் தோற்றமே எல்லாமே ஒன்றுபோல்
மன்பதையில் அரனுக்கு ஒன்றேதான் திருக்கோலம்
அந்திசாயும்போதினிலே நந்தியார்மேல் நடனம்தான்
மந்திரங்கள் பிரதோஷ காலந்தன்னில் ஒலிக்குமே.

14. சிவனேயென்றிருந்திட்டால் விதியின்படி வாழ்க்கையாம்
அவனை நினைந்திட்டால் விதியையே மாற்றிடலாம்
ஞானசம்பந்தனார் கோள்பதிகம் பாடியே
மானவர்களுனை வணங்க கூறுதனை யளித்தார்.

15. முக்கண்ணன் சபையினிலே தேவர்கள் கணங்கள்
மும்மூர்த்தி தலமாக திருவெண்காடு பதியில்
ஊழித்திரு நடனம் திருஆலங்காடு தனிலே
பாழும் மெய்நீங்க காரையம்மை முக்தியே.

16. கயிலையிலே ஞானசொரூப வேதமூர்த்தியாய்
மயிலெனும் உமையம்மையைக் கரமேந்தியவராய்
அகத்தியனுக்கு பொதிகையிலே மணக்கோலம் காட்டி
செகத்தினில் மேவிநின்றார் ஆலகாலக் கடவுளே.

17. குருவாக விளங்கி நின்றார் தக்ஷிணக் கடவுளே
தருவினிலடியிலே சனகமா முனிவர்க்காக
முப்பொருளை மௌனமெனும் மொழியிலே உரைத்து
செப்பிநின்றான் சின்முத்திரை தனையே தரித்து.

18. அரனாராம் தியாகராச ஆரூரின் ஈசன்
பரவை நாச்சியாருக்காக தூதுதனை மேவி
நண்பனின் உருவிலே சுந்தரமூர்த்திக்காக
எண்ணத்தில் நிறைந்து நின்ற என்னருமைக்கடவுளே.

19. தில்லையம்பலத்தினிலே ஆனந்த நடனமாடி
திருமதுரை யம்பதியில் கூத்தனாய் நடனமாடி
திருக்கயிலை தனிலே சக்தி தாண்டவமாடி
திருஆலங்காட்டினிலே ஊழிநடனமாடினாய்.

20. இராமநாதனாக உன்னை ஸ்ரீராமன் ஊன்றினான்
இராமஈஸ்வரம் என்ற கடலோரப் பதியிலே
சேதுபந்தனம் எழுந்த அமைதியான சாகரமாம்
கீழக்கடற்கரையில் பல ஸ்நானதீர்த்தங்களாம்.

21. நமசிவாய என்றவுடன் நமக்கெல்லாம் புண்ணியம்
உமையவள் பாகனாம் எங்கள்சக்தி நண்ணியன்
மெய்யதனில் நீறுபூசிய இறைஞான மூர்த்தியாம்
செய்கின்ற செயல்களில் உட்கருத்தாய் விளங்குவான்.

22. தர்ப்பாரண் யேசுவரராய் திருநள்ளா றம்பதியில்
மந்தனாம் சனைஸ்வரனுக்கு அருளினைப் பொழியும்
திருவழித்துணை நாதனாக விரிஞ்சிபுரத் தலத்தினிலே
நான்முகனுக்கு சிரம்குனிந்த ஞானமூர்த்தி நீயே.

23. ஸ்தாணுமா லயனாகிய முப்பெருங் கடவுளே
சுசீந்திரபுரி தன்னில் அருள்புரி ஈஸ்வரனே
பவ்யமாக தவக்கோலத்தில் அஞ்சனின் மைந்தனே
ஏகாந்தமாய் உனை வணங்கிநின்றான் பக்தர்களுக்காக.

24. ஓம்கார ஸ்வரூபமான ஓம்காரேஷ்வரரே
பீஜத்தின் உட்பொருளான பீமா சங்கரனே
திருக்கயிலை மீதுறையும் உமா சங்கரனே
மறுபிறவி யறுத்திடும் சோதி கேதாரீஸ்வரனே.

25. உஜ்ஜயினி மாநகருரை காளேஷ்வர மூர்த்தியே
காசிமாநகருரை கங்காதர ஈசுவரனே
பூஜ்யராம் பக்தர்களேத்தும் இராமேஸ்வரனே
வைத்திய நாதனாய் பக்தர்களைக் காப்பவனே.

26. அவினாசி நகரத்தில் நீபாவங்களைப்போக்குவாய்
தென்காசி மூதூரில் நீபிறவியறுக்க உதவுவாய்
அருச்சுனனுக்கு பாசுபதத்தை நீயருளுவாய்
மருங்கில்லா மதியதனைத் தந்தருளச் செய்வாய்.

27. திருக்கடையூர் திருத்தலத்தில் மார்க்கண்டேயன்
செருக்குடனே தான்வந்த யமதர்மஅரசனை
காலசம்ஹார மூர்த்தியைக் கைப்பிடித்ததனால்
காலத்தை வென்றுவாழும் அருளினைப்பெற்றான்.

28. தக்கனின் யாகத்தில் உமையம்மையவரை
தந்தைதான் செருக்கினால் அவமதித்தனால்
தக்கனின் தலையையே சிட்டெனத் தரவே
வீரபத்திர அகோர மூர்த்தியை சிருட்டித்தனரே.

29. சூரபதுமன் முக்திக்காக சுப்ரமண்யன் ஜனனம்
தீராதசினம் கொண்டு நெற்றிக்கண் சுவாலை
ஆறுமக்கள் தாமரைத் தடாகத்தில் தோற்றம்
நீறுபூசி ஷண்முகனாய் உருவாக்கிய மாற்றம்.

30. நமசிவனின் சோதியான ஆறுமுகன் ஏற்றம்
ஓமென்னும் பிரணவத்தின் உரையருளிய செற்றம்
தகப்பன் சுவாமியென பார்புகழும் கொற்றம்
மகனான முருகன் தக்ஷிணக் கடவுளின் தமையன்

31. புள்ளிருக்கு வேளூரில் வைத்தியநாத ஸ்வாமியாய்
தள்ளிடுவான் மெய்யினிலே வந்திருக்கும் மடியெலாம்
அங்காரகனாம் கிரகதாசன் மேனிசரும ரோகத்தை
மங்கவே செய்திட்டான் மருந்தீச மூர்த்தியே.

32. பனித்திருக்கும் சடையினிலே சோமனைச் சுமந்து
முடித்திருக்கும் கொண்டையிலே கங்கையை யணிந்து
ஒருபாதம் தூக்கி நின்று களிநடனமாடும்
சிறுபிறவிகளுக்கும் படியளிக்கும் வேதமூர்த்தியவரே.

33. பொதிகைமலை முகட்டினிலே திருபாபநாசம்
மதிசூடி உமையவளுடன் திருமணத் தோற்றம்
அதிசுந்தர ரூபனாய் குறுமுனி வனுக்காக
ஆலால ஈஸ்வரன் கொண்டிருக்கும் தலமாம்.

34. பாபநாசம் தலத்திற்கு எல்லோரும் வாரீர்
பாபவிநாசம் தந்திடுவான் எங்கள் பரம ஈசன்
விக்ரமசிங்கபுரம் சிங்கராயன் அமைத்ததாம்
மக்களெல்லாம் பொருநைநதி தீரத்தில் வாழவே.

35. கருவூரில் கரிகால சோழமன்னன் ஆட்சி
மருவெல்லாம் களையவே பசுபதி ஈஸ்வரன்
அமரரெல்லாம் எப்பொழுதும் கூடிநின்று தொழவே
அமராவதி நதிதீரத்தில் உறைந்திருந்தா னவரே.

36. வாய்பேசா மூகமான காமதேனு பசுவுக்கே
சேய்தனுக்கு மடியினால் பால்கொடுக்க வேண்டி
திருக்கோகர்ண ஈஸ்வரனே வேங்கையாக நின்று
காலந் தாழ்ந்திட்டான் திருவேங்கை வாசலிலே.

37. திருஞான சம்பந்தருக்கே உமையவள் பாலீந்த
பெரும்பேறு பெற்றதலம் சீர்காழி நகராம்
கட்டைதனை இவ்வுலகில் முக்திக்கு செலுத்தும்
சட்டைநாதராம் எங்கள் கைலாசத் தேவனே.

38. பஸ்மமெனும் அசுரன்தனை சம்ஹாரம் செய்யும்
குஸ்மமாகிய பெண்ணாக மோகினியவதாரம்
திரிகால மூர்த்தியாம் எங்கள் அரனாரே
சரியாக நடனமாடி பஸூமனை நிதனித்தாரே.

39. குறும்பலவின் தருவடியில் மோனமூர்த்தியாம்
திருக்குற்றால புரிதன்னில் அரனாரின் தோற்றம்
அருவியின் தீரமெல்லாம் கண்கொள்ளாக் காட்சி
எம்பெருமானுறையும் இடம் தெய்வீக மணமாம்.

40. மணிக்கதவம் எத்துணைநாள் திறவாதிருக்க
பணிசெய்யும் உழவார திருநாவுக்கரசன்
திருப்பதிகங்கள் பாடியே தாள்திறந்திட்ட
திருமறைக்காடு என்அப்பனுரை தலமாம்.

41. மயில்கள் நடனமாடுகின்ற மயிலாபுரி தன்னில்
மருந்தீசராக நின்ற ஈஸ்வர நாதனே
தக்ஷிணக் கடவுளே ஆலங்குடித் தலத்தில்
ஆட்சிசெய்கிறார் மஞ்சளெனும் குருவாகவே.

42. சிக்கலெல்லாம் தீர்ந்திடுமாம் சிக்கல் புரிதனிலே
பக்கத்துணையாய் நின்றிடுவார் திருவெண்ணெய்நாதராய்
க்ஷீரமெனும் பாற்கடலில் உருவான நெய்யினால்
நமசிவாயனாய் உருவாகி பக்தர்களைக் காப்பான்.

43. கர்நாடக மண்தனிலே சிவகங்கை மலையிலே
சர்வமாகித் தண்ணெனும் மூர்த்தியாய் நின்று
நெய்யதனைத் தன்னுருவில் குழைத்து நின்றபோதில்
வெண்ணெயாய் மாற்றிடுவான் சிறுபொழுது தனிலே.

44. நெய்வெண்ணெய் மாற்றம் விந்தையான காட்சி
மெய்யினிலே நீறுபூசிய அரனாரின் அருளாம்
நற்றுணையாய் நின்றான் அப்பருக் காக
கற்றுணையே நீரில் மிதந்திட்டான் அன்பால்.

45. ஐயாறு ஈஸ்வரன் திருஐயாறு புரிதனிலே
ஐயாறி கிப்பொன்னிநதி வலம்வரும் தலமாம்
ஐயாறு முப்பத்து நாட்களாம் வாழ்வில்
ஐயாறு தனிலே அரனின் திருமணக்கோலமாம்.

46. திருக்காரண ஈஸ்வரன் சைதையம் பதியிலே
திருக்காரணமே க்ரியாசக்தியின் மூலமாம்
கர்ணமந்திரம் ஒலிக்கும்வரை உறுதுணையாய்
சர்வங்களெல்லாம் அளித்து நிற்பான் ஈசானமூர்த்தியே.

47. தாயுமானவர் சன்னதி சிராப்பள்ளிக் குன்றிலே
தாயுமாகித் தோற்றம்தந்த எங்கள் குருநாதன்
திருவேரகந் தன்னிலே மால்மருகன்முன் அமர்ந்தான்
திருசிரபுரந் தன்னில் தனயன்கணபதியை சுமந்தான்.

48. ஏழுஸ்வரங்கள் ஏழுசென்மங்களின் தோற்றம்
ஏழுஸ்வரங்களாய் நின்றான் எங்கள் திருவீசன்
ஏழுகற்றூண்களாய் சுசீந்திரம் மதுரை தனிலே
ஏழுவித ஒலியாய் நின்றான் எங்கள்குருவீசர்.

49. திருவெறும்பீசனாக திருவெறும்பூர் தனிலே
திருப்பொன்னி நதிதீரம் விளங்கினார் ஈசன்
எறும்பாகிய சிறுபிறவி குறைவேயில்லையாம்
என்புதனை பக்தியாக்கித் தொழுகின்ற போழ்தில்.

50. ஜம்புநாத ஈஸ்வரன் ஜம்புலிங்கத் தலத்திலே
ஜந்துக்களாம் சிலந்தியும் ஆனையும் பூசித்து
முக்திபெற்ற தலமாகும் திருவானைக் காவே
பத்தியினால் செங்கணான் ஆட்சிசெய்த தலமாம்.

51. செம்பியன் மாதேவி பழையாறு அம்பதியில்
செம்பியன் குலத்தினிலே அவதரித்த அன்னையாம்
செம்பியன் நாடெல்லாம் அரனார்க்கு ஆலயம்
மன்பதை வாழும்மட்டும் அளித்திட்ட தேவியாம்.

52. திருவிடைமருதூரில் உறைகின்ற மஹா லிங்கம்
திருவினை உருவிலே சுமந்திட்ட ஈசுவரன்
பிரும்மஹத்தி தோஷந்தான் நீங்கிடவே அருள
ஆரூரில் இருந்துதான் செம்பியன் வந்தனரே.

53. திருவெண்ணெய்நல்லூரில் வாதம்தான் செய்தனரே
திருவாதவூர் இறைவன் தடுத்தாட்கொள்ளவே
சுந்தரமூர்த்தி நாயனார் கயிலாயத்தில் அடிமை
மந்திரமூர்த்தி இறைவனிடம் நாமெல்லாம் அடிமை.

54. திருவொற்றியூர்தனிலே பட்டினத்தார் அடிகள்
திருவொற்றி நின்றார் எங்கள் ஈசனுடனே
காயமே பொய்யென வெற்றுடம்பு நீங்கி
கடைநிலைமை ஈசனுடன் அடைந்திட்டார் உடனே.

55. திருக்கயிலாயமே உலகத்தின் உச்சநிலை
திருநாவுக்கரசரே அடைந்திட்டார் மெய்யுடனே
திருஅவ்வை அடைந்திட்டார் கடவுளருளினால்
பேயுடம்புட னடைந்திட்டார் காரைக்கால் அம்மையார்.

56. கயிலைமலை அடைய முடியுமா நம்மால்
பயிலவேண்டும் பக்திமார்க்க நெறிதனையே நன்றாய்
நத்தையும் அடையுமாம் கயிலாயபுரிதன்னை
செத்தவுடன் நானென்னும் அகந்தையையே நன்றாய்.

57. மார்க்கண்டேயனுக்காக காலனைச் சினந்தாய்
மயூர சன்மனுக்காக சிரம்தனை குனிந்தாய்
ஞானசம்பந்தப் பிள்ளைக்காக தமிழ்ப்பாலளித்து
தனயன் முருகனிடம் வேதங்களை யறிந்தாய்.

58. காமனை சினத்தால் பூதியாக்கினாய்
வேலனின் பிறப்பிற்காய் உமையவளை மணந்தாய்
முயலகனைக் காலடியால் சரணாகதி செய்து
இச்சா சக்தியை நீமிதமாக்கச் செய்தாய்.

59. நைமிசாரண்யத்தில் கைலாச ஆஸ்ரமத்தில்
சனகமா முனிவர்க்கு தத்துவ விளக்கம்மேவ
கண்டக்கி நதிதீரம் நீமோனமெய் தியதால்
உயிர்பிறப் பெல்லாம் நின்றுபோனதே யம்மா.

60. பிரதோஷ காலத்தில் நந்திமேல் நடனமாம்
காலருத்திரனின் போகமான நடனமாம்
சிவனார் நடம்செய்யும் காலம்தனில்
பவமாய் உச்சரிப்பாய் திருருத்திரம் தனையே.

61. திருருத்திரம் காலப்பிணி யறுக்கும் மந்திரம்
திருவரனே நாளெல்லாம் உச்சரிக்கும் மந்திரம்
திருநீறு தனைப்பூசி திருருத்திரம் சொன்னால்
திருவுடன் நம்மையே வாழ்விப்பான் அவனே.

62. பஞ்சலிங்கத் தலமாகும் திருப்பேரூர் தானே
பஞசலிங்கமே பஞ்ச இந்திரியங் களாகும்
இந்திரியங்களை செயித்தவன் இந்திரப்பதவி யடையலாம்
இந்தலோகத்தில் சிவனாரின் திரு வருளினாலே.

63. திண்ணன் கொண்டிருந்தது வாத்சல்ய பக்தி
மண்ணெல்லாம் பூதியாக வாயினிலெ கங்கையுடன்
நிணமெல்லாம் தந்துஈந்தான் திரிகால மூர்த்திக்கே.
கண்களையே அர்ப்பித்தான் கண்ணப்பநாயனாரே.

64. பேரரசனாம் சிபியவனோ புறவினைப் புரந்தான்
பேரரசனின் வாரிசோ மனுநீதியினைக் காத்தான்
திருவாரூர் பேரூர்க்கு நீவெல்லாம் வாரீர்
தியாகேசன் தரிசனம் தியாகப் பேரருளாக்கிடுமே.

65. திருமணிமுத்தாறு தீரத்திலே சேலம் சுகவனநாதர்
திருபொருநை நதிதீரத்தில் நெல்வேலி நாதர்
திருஐயாறு சங்கமத்தில் ஐயாறப்பர் அவர்
தென்பெண்ணைக் கரையினிலே வீரட்டா னேசுவரர்.

66. பொன்னிநதிக் கரையினிலே ஜம்புலிங் கேசுவரர்
வைகைநதி மதுரையிலே சொக்க நாதர்
பாலாற்றின் தீரம்தன்னில் ஏகாம்ப ரேசுவரர்
அமராவதிக் கரைதன்னில் பசுபதி ஈஸ்வரர்.

67. நர்மதை உதயத்தில் ஓம்காரேஸ் வரர்
கங்கை நதிகாசியிலே விஸ்வேஸ் வரர்
பவானி நதித்துறையருகில் சங்கமேஸ் வரர்
காசினியில் ஈஸ்வரரே பரிபாலிக்கும் தெய்வமாகும்.

68. தார்கொன்றை மாலைதனை நீ யணிந்தாய்
கார்கூந்தல் முடிதனிலே பிறை யணிந்தாய்
சேர்கொங்கை கங்கைதனை சிர மணிந்து
மார்தனிலே அரவத்தைத் தழுவு கின்றாய்.

69. பிரணவத்தின் பொருளானாய் பிரணதார்த்தி ஹரனே
நாராயணனின் ஸ்வரூபமான ஹரி ஹரனே
த்ரிநயன முகத்துடனே நடனம் புரியும்
புவனமெல்லாம் வேள்விகாக்கும் சங்கரனே.

70. பித்தனே பேயனே பிறைசூடிய பெருமானே
சித்தத்திலே பூரணமான உருவெளித் தோற்றமே
ஆதியுமாய் அந்தமுமாய் நின்ற கயிலைநாதனே
வேதத்தின் முதல்வா நாதத்தின் தலைவாநீ.

71. அழிப்பதற்கு கடவுளாம் ஆதியான சங்கரனே
சுழித்தோடும் கங்கைதனை தலையிலே அணிந்தவனே
முக்கண்ணன் ரூபமே திரிபுரத்தைக் காட்டிடுமாம்
முடிவில்லாத ரூபமே சோதிரூபம் தந்திடுமாம்.

72. திருநாளைப் போவேன் என்ற நந்தனாருக்காக
திருப்புங்கூர் தனிலே நந்திதனை நகர்த்திட்டான்
எரிபத்த நாயனாருக்காக கல்லடியும் தாங்கினாய்
மாலயனும் காணாத அடிமுடியைப் பெற்றிற்றான்.

73. உமையம்மை ஈசனின் மெய்யிலே பகுதியாம்
எமையாண்டு நின்றிற்றான் அர்த்தநாரித் தெய்வமாய்
சக்தியே இறைவனின் கிரியைக்குத் தலைவியாம்
முக்திய ளித்திடுவான் தொழுதிட்டால் எப்போதும்.

74. பாசமரக் காட்டினிலே மேவியிருந்திட்டான்
பாசூர் தன்னிலே பசுபதி ஈஸ்வரனாய்
புற்றீசன் இறைவனாய் தியானத்தில் இருந்தவனே
கற்றோர் போற்றிடும் எடையூர் அமரந்தவனே.

75. முக்கண் கொண்டிட்டான் திரிபுரமெரித்த ஈசன்
சிக்கல்களை அகற்றிடுவான் கண்கண்ட தெய்வம்
பிரணவத்தின் பொருளே பிரணதார்த்தி ஹரனே
சரவணநாதனை கண்பொறியால் அர்ப்பித்த அரனே.

76. விபூதியெனும் சாம்பலை விரும்பி யணிந்தவனே
அப்பூதியடிகள் திங்களூரில் பணிந்த ஈசனே
ஆம்பலை எப்பொழுதும் தலையில் சூடியவா
மழுவேந்திய இறவைா சூலமேந்திய சிவனே.

77. ஆலயமணிக் கதவே தாள் திறவாய்
என்அகி லாண்டமூர்த்தியே தாள் திறவாய்
மனக்கதவைத் திறந்து இருளினை யகற்றி
பரிபூரண ஸ்வரூபமாய் ஆக்கிடுவாய்.

78. விசுவநாத மூர்த்தியே நீயருள் வாய்
ஆதிபுரி ஈஸ்வரனே ஆயுளருள் வாய்
புற்றிடம் கொண்ட பக்கநாதனே நீ
மற்றுனை அடைய மாரக்க மருள்வாய்.

79. மாதாபிதா வானவனே மாதேஸ்வரக் கடவுளே
சோதனைகளை விலக்கிடுவாய் சோமேசுவரக் கடவுளே
கூந்தலைப் பரப்பி திருவையாறு தனிலே
மாந்தருக் கருளிடுவாய் கருணை யன்பினாலே.

80. மெய்யினிலே கபாலங்களாம் கரும வினைகளாம்
குஞ்சிய பாதங்களில் பக்தரின் இறைஞ்சலாம்
மஞ்சுநாத ஈஸ்வரனே கயிலையில் இருப்பான்
விஞ்சிடுவான் தன்கருணை மழையினாலே.

81. தில்லையிலே ஆடியிருப்பான் நடராச மூர்த்தியே
திருவாலங்காடு தனில் ஊழிக் கூத்தனாயினான்
தென்மதுரை புரிதனிலே விளையாடல் புரிந்து
தருமிக்குத் தமிழோலை தனையே யீந்தான்.

82. நெல்லை யப்பரே நீயே சுந்தரமூர்த்தி
முல்லைவன நாதரே நீ சாந்தமூர்த்தி
தர்ப்பை ஆரண்யம் தனில் வேதமூர்த்தி
பொற்சோதி ஈஸ்வரனே எங்கள் மூர்த்தி.

83. அனலுருவம் கொண்டு நின்றான் அண்ணாமலைதனிலே
அடிமுடியறியா வண்ணம் பிரம்மன் ஹரிக்காக
அண்ணாமலை இறைவனை நினைத்தாலே முக்தி
மண்ணுலகில் வந்துநின்றான் சோதி ரூபமாகவே.

84. கிரிபிர தட்சணம் மனமாயையை நீக்கிடும்
திரிபுர மெரித்த இறைவனின் கருணையினாலே
எத்துணை சிவலிங்கங்களைக் காணலாம் நடந்தால்
புத்துணர்ச்சி பெருகிவரும் தெய்வ சிந்தனையாலே.

85. குன்றினிலே நீ நின்றிட்டாய் தாயும் ஆனாய்
குன்றினிலே சிராப்பள்ளி தலமே பெருமையாம்
குன்றிடுவாய் நான் எனும் அகந்தையினாலே
குன்றினிலே பிரணவத்தை போதித்தான் குகனே.

86. செஞ்சுடர் அழலினை சொரிந்திட்டாய் அரனே
சிவசுப்ரமணியனைத் தந்திட்டாய் ஈசனே
தேவர்சிறை நீக்க தனயன் பிறந்திட்டான்
சிவனாரின் மெய்யிலே சோதி ரூபமாய்.

87. வீரவாகுவை சிருட்டித்தான் ஷண்முக ஸ்வாமிக்கே
சூரபதுமனை சம்ஹரித்தது அமைதிக் காகவே
தேவர்கள் அசுரர்கள் எப்போதும் போராட்டம்
சிவாயநம என்றவுடன் போராட்டம் அமைதியே.

88. நந்திதேவன் சிவனாருக்கு ஆத்துமாவின் அம்சம்
நந்திதேவன் நகர்ந்திட்டான் நந்தனின் பக்திக்கே
நந்திதேவன் திரும்பி நின்றான் திருவலமென்றஊரில்
வந்தனை செய்யும் பக்தர்களின் நன்மைக்காகவே.

89. வெண்காடு தலமாகும் புதபகவான் திருவூராம்
மண்ணிலே தலமாகும் மும்மூர்த்தி உறைவிடம்
ஆதிதில்லை என்றிருக்கும் புதனாரின் தலத்திலே
பூதிதரித்த சிவனாராம் அகோர மூர்த்தியாய்.

90. சரபேஸ்வரனாய் உருவெடுத்தான் புவனமாதலத்தில்
சரபு எனும்புள்ளே சிங்கமுக ரூபமாம்
நரசிங்கனாம் ஹரியுடனே அமரில் செயமாகி
நரசிங்கனை இலக்குமியுடன் அமைதி செய்தனரே.

91. ஏகபாதமும் மூன்று சிரமும் படைத்திருந்தான்
மோகமெல்லாம் போக்கிடவே தத்தக்கடவுளாய்
தத்தாத்ரேயர் சிவனாரின் ஒரேஅம்சமாம்
தத்துவங்களை விளக்கிடவே தாணு மாலயனாக.

92. ஆலவிருட்சம் ஞான மார்க்கம் தந்திடும்தருவாம்
கல்லால விருட்சம் தட்சிணக் கடவுளின்தருவாம்
அத்திமர நிழலினிலே பிரம்மன் தவம் செய்வார்
ஆலமர நிழலினிலே ஹரனார் தவம்செய்வார்.

93. ஆதிசங்கரராய் அவதரித்தான் தட்சிணக் கடவுளே
போதித்தார் மக்களுக்கே பஜகோவிந் தத்தை
அழிக்கும் கடவுளுக்கு சிருட்டி வித்தைசுலபம்
செழிக்கும் விதமாக செய்திடுவான் சென்மத்தை.

94. பாற்கடலாம் சாகரத்தை கடைந்தெடுத்தபோது
பார்போற்றும் தெய்வீகப் பசுவும் வந்ததாம்
கற்பகத் தருவும் திருமறைகளும் மேவிவந்தபோது
பற்களைக் கடித்தங்கே நஞ்சை அரவீந்ததே.

95. திருப்பாற்கடல் நஞ்சாகி தேவரெல்லாம் அஞ்சவே
மறுப்பில்லா சிந்தையுடன் தானே பருகினார்
எந்தை பரப்பிரம்மம் நஞ்சுண்ட கண்டனாய்
சிந்தையிலே நின்றிட்டார் சுருட்டப்பள்ளி ஈசனாய்.

96. ஞாலத்தில் தோன்றிற்ற பழமைத்திருமணம்
மேலான நெறிகளுடன் மேவிய திருமணம்
கயிலையில் அரனாரின் உமையம்மை திருமணம்
தமிழ்ப்பண்பில் திளைத்திட்ட தெய்வத்திருமணம்.

97. முப்பத்து முக்கோடி தேவர் கணங்களும்
செப்பரிய முனிசிரேட்டர் தவ வேதியர்களும்
அயனாரும் மாலவரும் கூடிநின்று வாழ்த்தவே
பொதிகையிலே குறுமுனியும் தரிசித்த திருமணம்.

98. சிவசக்தி ஸ்வரூபமே மானிட ஸ்வரூபமாம்
ஹரிஹரனே அய்யப்பனின் சிருட்டி கர்த்தராம்
ஐந்தெழுத்தை நினைத்தாலே கருமங்கள் தொலைந்திடுமே
சிந்தையிலே ஓதிடவே எஞ்ஞான்றும் களிப்பேயாம்.

99. சங்கமேஸ்வரன் எங்கள் தந்தை ஈஸ்வரனேயாவார்
பங்கமில்லா வாழ்க்கையையே களிப்புடனே யருள்வார்
மங்காமல் தரணியிலே செம்மையுடன் வாழ
சிங்கமென மாற்றிடுவார் தம்முடைய அருளாலே.

100. விசயனை நேரில்காண புலையனாய் வந்தாய்
பாசுபத அஸ்திரத்தைத்தந்து விஜய னாக்கினாய்
ஆரூரில் சோழமன்னன் நீதித்திறம் எடுத்தியம்பி
பேருவகையுடன் சோமஸ்கந்தராய்க் காட்சியளித்தாய்.

101. கங்கையென்னும் அன்புமாதா சிரசில் நின்றாள்
அரவென்னும் ஹாரத்தை எப்போதும் அணிந்திருப்பாய்
இளங்கலை பிறையைப் பித்தனாக அணிந்து
விளங்கிய முக்கண்ணனாய்க் காட்சி கொடுத்தான்.

102. சிவலிங்கமான எங்கள் லிங்க அரசனே
ஏகலிங்கமாய் மனதில் நிலைத்திருப்பாய்
லிங்கோத்பவர் கருவினில் உருவாகுபவர்
மகாலிங்கமே முக்தி நிலை அருளிச்செய்பவர்.

103. தோஷங்களை நீக்கி அருள்மார்க்க மருளுவாய்
பிரதோஷக் காலத்தில் மத்தள நாட்டியமாடுவார்
சந்தோஷ மாயிருந்தால் தெய்வசன்னதி யளித்து
இந்திர லோகமெனும் அரும்பதவி அளித்திடுவார்.

104. ஏகாந்தமாகி யுன்னையே மனத்துள் வரித்தேன்
தேகமெல்லாம் உருகும்வகை யுன்னை ஆவஹித்தேன்
மார்க்கந்தனை காட்டிடுவாய் மெய்வழி வீட்டிற்கே
சேர்த்திடுவாய் என்னையே சிவானுபவ நிலையிலே.

105. கல்லால மூர்த்தியேயெனகது ஞானம் தந்தருள்வாய்
கல்யாண மூர்த்தியே நீயெனக்கு சீரெல்லாம் தந்திடுவாய்
ஆலால சுந்திரனே எனக்கு மேலான வாழ்வளிப்பாய்
காலமெல்லாம் உன்னைத் துதிக்க வாய்ப்பளிப்பாய்.

106. கனியின் பொருட்டு துவக்கம் ஒருலீலை
மனதளவைச் சீர்தூக்திக் காட்ட ஒருலீலை
தனயன் கரிமுகனே தந்தைதாயைச் சுற்றியே
கனியை யடைந்திட்டான் செயத்தினை யடைந்தான்.

107. அம்மையப்பனே பிரபஞ்சமென சீர்தூக்கிக் காட்டிடவே
செம்மையாய் விளக்கிட்ட மாங்கனிப் பிரபாவம்
கரத்திலே இருப்பதை க்ஷணத்திலே தந்திடுவார்
சரணம் அடைந்திட்ட பக்தரின் மனோலயத்திலே.

108. தாய்தந்தையில்லாமல் அவதரித்த ஷண்முகனாம்
மெய்யினில் சோதியிலே அவதரித்த சக்திபாலன்
சிவனாரின் தேஜசெல்லாம் குவித்து அழகனாய்
தவனான பிள்ளையை அளித்திட்டார் ஈசனாம்.

109. உலகத்தில் முதலான குருவானவர் ஹரனாரே
சிலையென அமர்ந்திருந்தார் சனகமுனி சீலர்முன்
சின்முத்திரைதான் மனஒளியை சீராக அருளிடுவார்
பன்மதியைப் பாங்காக பிரணவமாய்த் தந்திடவே.

110. மூலக்கருத்தேயாம் அத்துவைத நெறிகளாம்
மேலுலகை எட்டிடவே அகத்திலே ஈஸ்வரனை
ஜீவாத்தும ஒளியினை சூக்குமமாய் ஏற்றிநின்று
பரமாத்துமனிடம் ஒன்றிடவே தவமாய் இயற்றிடுவோம்.

111. பரிபூரண சூன்யநிலையை அனுபூதி என்றிடலாம்
திரிபுரம் எரித்த ஈசன் மெய்யிலே விபூதியாம்
சுட்டுபுடமளித்தான் பக்தர்களின் இச்சையெல்லாம்
எட்டுதிக்கும் அவன்ஸ்வரூபம் காட்டி விளக்கிடுவான்.

112. தாண்டவக்கோன் தன்னதிர்வை வெளிக்குக் காட்டிடுவான்
மாண்டவரின் கபாலங்களைக் கருத்தாய் ஹாரமாக
ஊழித்திருநடனம் ஞாலத்தின் சமநிலைக்கே
பாழுடம்பு அனுதினமும் கிரியைசெய் தீமைகட்கே.

113. வரகூணப் பாண்டியனுக்கு சிவகோலம் அருளி
மரபெல்லாம் சீர்தூக்கி தமிழ்ச்சங்கம் நிறுவி
கல்யானைக்குக் கரும்பீந்த சோம சுந்தரமெ
பிரம்படி பட்டுநின்றான் பிட்டினைச் சுமந்தே.

114. ஆத்திமாலை சூடிய ராசராச சோழனே
நேர்த்தியாய் அமைத்திட்டான் பெரிய கோயிலை
பொன்னிநாடு முழுவதுமே சிவாலயங்கள் பெரிதாம்
சென்னியிலே துதிசெய்தார் அறுபத்து மூவரே.

115. திருநாளைப்போவாராம் நந்தனைக் காட்டியே
ஆருத்திர தரிசனத்தை எல்லோர்க்கும் தந்திட்டார்
அந்தணராய் மாறிடலாம் அகத்தன் பினாலே
சிந்தனைத் தத்துவமே திண்ணனின் பக்தியே.

116. சிவனாரின் இருப்பிடமாம் கயிலாயப் பொருப்பாம்
தவமேவி வாழ்ந்திட்டால் கயிலையை அடைந்திடலாம்
அடைதற் கரிதான இடத்தைக் குறிப்பிடுவது
தடையெல்லாம் தாண்டியே இலக்கை யடைவதாகும்.

117. நைமிசாரண்யத்தில் தவத்தில் இருந்த ஈசன்
பூமியில் கண்டகி திரிசூலி சங்கமத்தில்
மேவியிருந்தான் சனகாதி முனிவரின் முன்னே
தியானத்தில் இருந்தே சின்முத்திரை தரித்தே.

118. நஞ்சணியும் கண்டத்தில் வெவ்வரவு சுற்றியதே
துஞ்சுபவர் கபாலங்கள் மென்கழுத்தில் தங்கிடவே
எடுத்த திருவடி அன்பருக்கு ஆசிசெய்யும்
பனித்த திருச்சடையில் பிறைநுதலும் கங்கையுமே.

119. தமிழ்ச்சங்கம் மதுரையிலே நிறுவிட்ட ஈசன்
தமிழ்க்கடவுளைப் படைத்தான் உலகம் உய்யவே
தமிழ்ச் சுவையாய் பெரியபுராணத்தில நாம்காணும்
அடியார்க் கடியாரிடம் பணிந்திடும் ஈசனாரே.

120. சக்திதனின் சக்தியை மாந்தருக்குக் காட்டிடவே
தக்கனிடம் சக்தியை பிரிந்திட்டான் ஈசுவரனே
சக்தியும் அறிந்து கொண்டாள் ஹரனின்சக்தியை
சக்தி சிவனைக்கியம் உலகுய்ய வேண்டியே.

121. தில்லைகாளி தாண்டவம் உக்கிர ரூபமாம்
தில்லை நடராசனோ சௌம்ய நடனமாடுவான்
நடனாரின் ஆலிங்கனம் மறுபிறவி நீக்குமாம்
உடனோடு மெய்யினிலே எப்போதும் இருக்குமாம்.

122. ஓம்எனும் மந்திரமே சிவலிங்க வடிவாகி
நாமெல்லாம் துதித்தவனை நித்தமும் போற்றிடவே
அண்டமெல்லாம் அனுதினமும் காத்திடுவான் அவனே
மண்டியிட்டு நிற்போம் அவன்கருணை நாம்பெறவே.

123. அந்தமில்லா பெரும்சோதி ரூபமான அரனே
பந்தமெல்லாம் அறுத்திட்டு உன்னிடமே சரணே
ஆழ்மனத்தில் நீநிறைந்தாய் சிவைக்கியம் ஆனாய்
சூழ்ந்திடும் வினைகள் பனிபோல விலகுமே.

124. குங்குலியம் போல் கரைந்திடுமே மனஅழுக்குதானே
எங்கெங்கும் நிறைந்திருக்கும் உன்னையே யடைந்தால்
என்னுடைய மெய்யிலே யுன்னையே உண்ணினேன்
தென்னிலங்கை யரையனை ஆலிங்கனம் செய்தவனே.

125. எடையூருதனிலே சித்த லிங்க ஈஸ்வரன்
இதயந்தனில் பாலினை சொரிந்த கோவுக்கு
மோட்சந் தன்னை அளித்து மாந்தரெல்லாம்
சுபிட்சமாக வாழும் பேறுதனை அளித்தானே.

126. சிவகெங்கையெனும் ஊராம் சிவனின் தலத்திலே
சிவமூர்த்தி தானெப்பொழுதும் தண்மையான ரூபம்
பசுநெய்யை வெண்ணையாய் மாற்றும் தன்மை
பசுபதியின் கருணையை கண்கூடாய்க் காட்டும்.

127. மங்கையர்க் கரசியே பாண்டியனின் தேவியாம்
திலகவதி அம்மையார் சோழநாட்டில் தேவியாம்
இசைஞானி யம்மையார் திருவாத ஊரிலாம்
காரைக்கா லம்மையார் சொற்பதிகம் பாடினார்.

128. நாயகனைப் பணிந்தவரெல்லாம் நாயன் மாராகினார்
மங்கைநல்லார் இவரெல்லாம் வீடுபேற டைந்தார்
நஞ்சுண்ட ஈசனை வலியவே பிடித்திட்டால்
பஞ்செனவே பறந்திடுமாம் வல்வினை இடறெல்லாம்.

129. ஓமானின் திருநாட்டில் மஸ்க்கெட்டெனும் தலமாம்
ஓமெனும் மந்திரத்தின் முதலாகிய இடமாம்
திருக்காசித்தலமே போல் இறையவரின் உருவே
மருந்தாகி விளங்கிடுமே அயராது நினைத்தால்.

130. திருப்பாண்டிக் கொடுமுடி கொங்குநாட்டில் மேவும்
திருப்பொன்னி சுழுத்திட்டு இடமாகி விடுமாம்
திருநள்ளாறு ஈஸ்வரனே இங்கேயும் இருப்பார்
கருமவினை தீர்த்திடவே கருணையின் வடிவாய்.

131. சங்கரனாரின் வாசம் திருசங்கரன் கோயிலில்
சங்கர நாராயணனாய் அவன்ஹரியின் வடிவிலே
சங்கெடுத்து நாதமெனும் சீரான பண்ணிலே
சங்கடங்கள் நீக்கிடுவார் தன்னருளின் அன்பால்.

132. கார்மேக வடிவமாய் விளங்கிடுவார் திருமால்
பூதியாம் வடிவிலே விளங்கிடுவார் திருவீசர்
கயிலாயப் பொருப்பிலே நந்தியார் திருநடனம்
ஒயிலாய் உமையம்மையுடன் ஆடுவார் ஈசனே.

133. ஒப்பிலா மணியதனை உமையவள் அணிந்திடவே
முப்புரம் எரித்து சோதிசுவாலையை அவரணிந்து
ஒருபாதம் தூக்கியே உலகாளும் உவப்பினையே
குருவானார் உருவிலே வியப்போடு கண்டிடவே.

134. ஆதிமூல நாதனே அருள்வாய் பண்வன்பினையே
பாதியுடல் பெண்ணான சிவசக்தி ஸ்வரூபனே
சோதியான சங்கரனே மருள்நீக்கும் ஈசனே
மீதியான பாழுடம்பை பேறுபெற அருளிடுவாய்.

135. ஆனந்தநடம் புரியும் தாண்டவக்கோனே
அபிராமி உமைபுகழும் தாண்டவக்கோனே
ஊழிநடனமாடிடுவாய் தாண்டவக்கோனே
ஊழ்வினையை யறுத்திடுவாய் தாண்டவக்கோனே.

136. சிவனாரின் திருக்கோயில் எங்குமே யில்லையாம்
நாமக்கலெனும் நரசிம்மன் திருவூர் மருங்கில்
சோதியானஈசன் நாராயண ஸ்வரூபம் தன்னில்
காட்சி கொடுத்ததனால் இப்பத்ததி வந்ததாம்.

137. ருத்திராட்சம் தனையணிந்து மோன நிலையடைவாய்
ருத்திரன்சின்னம் விபூதியும் ருத்திராக் கமுமாம்
நேபாளத்தில் நான் முகனாம் பசுபதிநாதர்
கயிலையில் இருந்த காருண்ய நாதரேதான்.

138. ஞானமெல்லாம் அதிகமானால் பித்தநிலைதானே
ஞானமே உருவானார் எங்கள் அரனார்தானே
மோனநிலை சிவலிங்கம்தனில் சிறுவில்வமதனை
ஆதரவாய் அருச்சித்தால் வீடுபேறு திண்ணமே.

139. மஹாதேவரின் அரசாட்சி கயிலைமலையதனில்
சதாகாலம் மனமதனில் ஆட்சி செய்பவனவனே
பூடகமாய் அவனளிக்கும் சோதனைகள் எல்லாம்
நாடகமாம் வாழ்க்கையினில் மேம்படுந்த த்தானே.

140. மகுடபதியென விளங்கினார் திருப்பாண்டிக் கொடுமுடியிலே
மகுடத்தில் கங்கையையும் இளம்பிறையும் சூடியே
நஞ்சுண் டேஸ்வரராய் அமர்ந்திட்டான் ஈஸ்வரனே
நஞ்சன்கூ டென்னும் மேலான அருள்புரியிலே.

141. கல்லால மரத்தடியில் அமர்ந்தார் தட்சிணேஸ்வரர்
எல்லா வித்தைகளும் மௌனத்தால் அருளிட்டார்
சனகாதி முனிவரெல்லாம் பத்மாசனத்தில் வீற்றிருந்தார்
சின்முத்திரையினில் கண்டார்கள் பரிபூரண சோதியினை.

142. சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் ஈசனின் கருணையை
பேர்பெற்ற நிலையடைய அவனின் நற்கருணைவேண்டும்
கருணாகரனே எங்கள் ஈசன்மந்திர மூர்த்தியாம்
தருணத்தில் வந்திடுவான் அன்பினைச் சொரியவே.

143. பராபரம் எனவே சூன்யநிலையை வருணிப்பர்
நிராதர நிலையிலும் கோலிட்டு தாங்கிடுவார்
மாலயனும் குபேராதி தேவர்களும் வணங்கிடுவர்
அடிமுடியறிய வொண்ணா அண்ணாமலை ஈசனாரை.

144. தங்கரேகையை சிரம்தனிலே தரித்திருக்கும் ஈசன்
மங்கவொண்ணாப் புகழுடன் வாழ்கின்ற ஈசன்
மூகாம்பிகை அனுதினமும் பூசித்திருக்கும் ஈசன்
நாகலோகம் தனில் தாண்டவமாடும் எங்கள்குருஈசன்.

145. திரியம்பக இறைவன் சிரத்தில் மூன்றுதுளைகளாம்
திரிமூர்த்தி யவதாரத்தில் சுயமான ஸ்வரூபமாம்
திரிநேத்ர சிரமதனை கரமதிலே தொழுதிட்டால்
சேராது வினைகளெல்லாம் நேராது பழிகளாம்.

146. சமயங்க ளெல்லாம் மறுபிறப்பை யறுப்பதற்கே
நமசிவாய வெனும் ஐந்தெழுத்தை உணர்த்திடுமாம்
மார்க்கண்டேயனுக்கு முக்திதந்து காலனை உதைத்திட்ட
உமையொரு பாகனின் திருநடனம்தில்லை யம்பதியிலெ.

147. அண்டத்தின் பேரருளை விளக்கிட்டேன் நன்மதியில்
தண்டத்தைத்தான் தாங்கி சங்கரனாய்த் தரணியிலே
பரமாச்சார்ய குருவாக உனையே தரிசித்துவந்தேன்
சிரம்தாழ்த்தி தண்டனிட்டேன் எந்நாளும் வாழ்க்கையிலே.

148. சிவலிங்கம்தனை மனதில் வரித்திருப் பார்க்கும்
சிவாம்சமெனும் ருத்ராக்கத்தைக் தரித்திருப் போர்க்கும்
தஞ்சம் அளித்திடுவார் ஆலிங்கனம் செய்திடுவார்
அங்செழுத்தின் சக்தியினைப் பூரணமாய ளித்திடுவார்.

149. சுடலைப்பொடி பூசிமனம் கவரும் மூர்த்தியாம்
உடலெங்கும் புலியாடை தரித்திட்ட ஈசனாம்
பரபரக்கும் அரவம்தனைத் தரித்ததன் நோக்கம்
ஊர்வன என்றிருக்கும் சிறுஉயிர்கட்கும் துணையாம்.

150. திருமறைக்காடு பழம்பெருமைப் புண்ணிய தலமாம்
திருஞானக் குழந்தையும் அப்பரும் வணங்கினாராம்
ஆலயமணக் கதவம் திறந்த அதிசயம்
மேலாண்மை நாவுக்கரசரின் கவிச் சுவையாம்.

151. திங்களூர் பிறைச் சந்திரனின் வாசஸ்தலமாம்
திங்கள்பிறை சூடிய ஈசனின் பக்தரிடமாம்
அப்பூதி யடிகளார் நாவுக்கரசரின் நாமத்தாலே
விபூதிமேவும் பக்தர்களுக்கு தொண்டு செய்தாரே.

152. மறையோதும் பக்தரின் மகவை அரவுதீண்டிடவே
குறையேதும் பகராமல் அப்பருக்கு உணவளிக்கவே
திருநாவால் ஒன்றுகொலாம் என்று பாடியே
அரனாரால் விஷம்நீங்கி மகவு எழுந்ததே.

153. திருவாசகம் உரைத்தனராம் மணிவாசகர்
திருப்பெருந்துறை வாழ்ந் திருந்த ஒருவாசகர்
அமைச்சராகி இருந்தபோது இறைத்தொண்டு செய்யவே
நரிகளைப் பரியாக்கினார் எங்கள் ஈசன்.

154. வண்டறைப் பொய்கையின் வசந்த மாருதத்தை
என்னப்பன் தந்தனராம் நாவுக் கரசருக்கு
சுண்ணக் களவாயில் அமிழ்த்தி அமர்த்திட்ட
மன்னரின் தண்டனைக்கு மாற்று தரவே.

155. நந்தனெனும் சிவனடியார் புலைய குலத்தினராம்
எந்தநாளும் முக்கண்ணரின் நினைவு கொண்டே
நாளைப் போவேன் என்றவண்ணம் கடமை செய்தார்
நாளும்வந்ததே அந்தணராய் ஏற்றம் பெறவே.

156. கற்பாறை மிதக்குமா நீரின் வெள்ளத்தில்
இரண்டுமுறை கற்பாறை மிதந்த அதிசயம்
ஒருமுறை அப்பருக்கு கற்பாறை தோணியானதே
ஒருமுறை இராமபிரானுக்கு மிதவை தோணியானதே.

157. ஆட்கொண்டேசர் சன்னதி திருஐயாறம்பதியில்
ஆட்கொண்ட பக்தர்களுக்கு ஆஸ்ரையை யளித்திடவே
ஆளும் ஈசனுக்கு மேலொருவர் யாருமில்லை
மாளாத சென்ம துக்கங்களை நீக்கிடவே.

158. சமணமதம் தழுவிநின்றார் நாவுக்கரசர்
அமணர்களை போற்றுவதில் வருத்த மடைந்தார்
தமக்கையாம் திலகவதித் தாயாரவரே
ஈசனை மேவிநின்று மருவிடவே வேண்டினார்.

159. பாண்டிய மன்னருக்கு சூலைநோயைத் தந்து
வேண்டியே திருநீறுதனை அருந் திடவே
சூலைநோயும் தீர்ந்து மன்னர் சுகமடைந்து
நிலையான சைவமார்க் கந்தனை புரந்தார்.

160. தெற்கு பாரதத்தில் எத்துணை ஆலயங்களாம்
சிற்றடியைப் பணிந்திடவே மற்றும் நெறிமுறைகளாம்
கல்லால மூர்த்தி தெற்குதிக்கு கடவுளல்லவா
எல்லோரும் அதற்காக சைவமார்க்க மாயினார்.

161. கயிலைமலை பனிமலையாம் ஈசனின் மகுடமாம்
ஒயிலாக உருவாகும் அமர்நாத்தில் பனிலிங்கம்
ஈசனில்லை எனச் சொல்வாரும் வியந்திடுவர்
ஈசனின் உருவினையே பனியிலே கண்டால்.

162. அரிதான முக்திநிலையை அனுதினமும் வேண்டி
சிறிதான முயற்சியால் தெளிவாகப் பண்ணினால்
சிந்தனையில் நினைத்து நன்றாக வேண்டினால்
வந்தனைக்கு அடிபணிவார் குருவாக அருள்வார்.

163. ஈனப் பிறப்பேயாம் மனித்தப் பிறவியே
மோனத் தவத்தினால் ஏத்துவார் அருமையாய்
ஈசநிலை யடையலாம் மேற்தவ குணத்தினால்
பாசத்தைக் களைந்திடடா மானிடப் பிறவியே.

164. மன்றாடிப் பணியவேண்டும் நம்குரு மூர்த்தியை
நன்றாகப் பண்பாடி யாசித்திடவே வேண்டும்
நித்தம் கலியகன்று வீடுபேறு அடையவே
பக்திதான் இன்றியமையாத முயற்சியே ஆகும்.

165. குற்றங்கள் செய்வதைக் காணாது காண்பர்
செற்றம் பெற்ற இயக்கத்தை நன்றாகக் காண்பர்
ஏமாற்ற முயல்வது அரனிடம் இல்லையாம்
நீமாற வேண்டுமைய்யா அவனையே புகல்வாய்.

166. தசமுக இராவணன் ஸ்ரீகண்டபக்தர் ஆவான்
ஆகாச லிங்கத்தை இலங்கைக்கேகி மேவினான்
இலங்கைதனை ஸ்ரீலிங்கம் அடையாது விடுத்திடவே
கோகர்ணத்தில் பிள்ளையார் நேர்த்தியாய் நிறுத்தினார்.

167. இலங்கேஸ்வரனை வென்றுவந்து செயமாலை சூடிய
திருமகனாம் ஸ்ரீராமன் பிரதிஷ்டை செய்யவே
நினைந்திட்ட இராமலிங்கம் வந்து சேரவில்லையே
மண்ணில் அமைத்திட்டார் ராமேஸ்வர லிங்கமே.

168. அரவுக்கு மறுதிங்கள் சட்டைநீங்கிப் போகுமாம்
அனுதினமும் சட்டைநாதருக்குப் புனுகிலே சட்டையாம்
அபிஷேகமில்லாத ஈசன் பிரமாபுரத் தலைவனே
சம்பந்தப் பிள்ளைக்கு அம்மையப்ப ரானவர்.

169. திருக்கஞ்சனூர் அக்னீசுவரர் சுக்கிர ஸ்வரூபம்
அக்னிப் பிழம்பானவர் எங்கள் அரனான ஈசனே
சுட்டெரிக்கும் தன்மையால் கஷ்டங்கள் நாசமாம்
அழல்முன்னே வேறுசக்தி செயலிழந்து போகுமே.

170. நெற்றியிலே கண்ணென்பது சக்திபீட ஸ்தலமே
பற்றிடுமே மனஇயக்கம் ஒன்றிடுமொரு நிலையில்
ஜீவாத்மாவின் குறியீட்டு குவிந்திடுமே அதனில்
பாவாத்மாவை நோக்கிடில் அழலெனவே அனலாம்.

171. மனித்தப் பிறவிதான் தலையாய பிறவியாகும்
தனித்திருக்கும் போதெல்லாம் இறைநாமம் பகரவே
பனித்த சடையன் பணித்திருப்பார் எவருக்கும்
குனிந்த சென்னியுடன் நாம்பணிவோம் ஈசனையே.

172. ஏழையென்று யாருமில்லை இப்புவி தனிலே
பாழுமிந்த காயந்தன்னை அர்ப்பணித் திடுவோம்
ஊழ்வினையை வெல்லவே சிவாயநம என்று
ஆழ்ந்த சிந்தனையுடன் அவனை தியானிப்போமாக.

173. தேவாரம் தனைஓதி நாம்நல்வழி பெறலாம்
தேவனுடைய ஆரமதே தேவார மாகும்
ஞானச்சேய் பாடியது தேனான தேவாரம்
நாவரையர் பாடியது அமிழ்தான கீதமாம்.

174. நான்கு முகம் கொண்டுநின்றார் பசுபதிநாதர்
நான்கு முகம் பிரம்மன் ஒருவனுக்கே அல்லவாம்
நான்கு வேதங்களைப் படைத்தவரே ஈசனாவார்
நான்மறைகளும் ஈசனின் பெருமைகளை யேத்தவே.

175. காமாரி யென்பவனே இச்சைகளைத் தூண்டுவான்
காமாரியைப் பசுமமாக்கியவர் தக்ஷிணா மூர்த்தியே
இச்சைகளை வெல்லவே சிவனை வேண்டுவார்
இச்சைக ளில்லாமல் கிரியையே யில்லையாம்.

176. திருவாசகம் மணிவாசகர் ஈசனைப் பாடியே
திருவருளைப் பெறவேண்டி ஈசனை வேண்டியே
அருள்பாக்களைப் பாடினார் வள்ளலார் அப்பரே
அருள்சோதி வடிவிலே ஈசனைக் காணவே.

177. வடலூரில் சோதியுடன் வள்ளலார் ஐக்கியம்
வடதமிழ் பூமியில் வெள்ளாளர் குடியினிலே
வள்ளலார் தில்லை நாதரை சோதியீசராய்
தள்ளிடுவோம் கருமவினை யெனவே கருணையால்.

178. திருச்சைலப் பொருப்பினிலே மல்லிகார் சுனராக
திருவீசர் ஆந்திரநாட்டில் வாழ்ந்திருப்பார் ஈசன்
ஆசார்யார் சந்திரசேகரர் எந்நாளும் பூசிப்பார்
ஆசாரத்துடனே மானுட இனம் தழைத்திடவே.

179. திருமயிலையில் கபால ஈஸ்வரனைத் துதித்து
திருமதுரையினில் சொக்கேஸ் வரனைத் துதித்து
திருக்கேதாரத்தில் கேதாரீஸ் வரனைத் துதித்து
திருக்காசி தனிலே விசுவநாதனைத் துதித்து,

180. வேணுபுரி நாதரைப் பட்டீஸ்வரத்தில் தரிசித்து
வேதபுரீஸ் வரரைக் கழுகாசலத்தில் தரிசித்து
சட்டநாத ஈஸ்வரரை பிரமாபுரத்தில் தரிசித்து
காளத்தி நாதரை காளஹஸ்தியில் தரிசித்து

181. இராமநாதனை இராமேஸ் வரத்தில் வணங்கி
ஜம்புநாதரை ஆனைக் காவில் வணங்கி
தாயுமானவரை திரிசிர புரத்தில் வணங்கி
மஹாலிங்க ஈஸ்வரனை மருதூரில் வணங்கி

182. கடம்ப நாதரை காலையில் குளித்தலையில் வேண்டி
சொக்கநாதரை மதியத்தில் ஐயர்மலையில் வேண்டி
வேங்கிநாதரை ஈங்கோய்மலையில் மாலையில்வேண்டி
வைத்தியநாதரை வேளூரில் நன்றாக வேண்டி

183. மழபாடி இறைவனைப் பண்பாடிப் பணிந்து
ஏகாம்பர இறைவனைக் காஞ்சியிலே பணிந்து
திருவீச இறைவனைக் கற்பகநகரில் பணிந்து
திருத்தளிநாதரைத் திருப்பத்தூரில் பணிந்து

184. திருக்கோகர்ண ஈசனைப் பாங்காக மன்றாடி
பழையாறு ஈசனை நன்றாக மன்றாடி
குற்றால நாதரை சீராக மன்றாடி
காளேஸ் வரரை உச்சியினியிலே மன்றாடி

185. நன்மை தீமை எல்லாவைக்கும் பொதுவாகி
முதலும் முடிவும் இல்லாமல் அருள்கின்ற
எங்கள் ஆரூரின் ஈசனைக் காணாமல்
நீங்குமா எனதுஆயுள் உமாபதித் தேவரே.

186. அண்ணாமலைத் தேவரைக் காணவே வாரீர்
உண்ணாமலை அம்மையுடன் மேலாக விளங்கி
அருள்கின்ற பேரருளைப் பெறவே வாரீர்
மருள்நீக்கும் தெய்வானுபவம் பெறவே வாரீர்.

187. சிவசக்தி ஐக்கியம் ஸ்ரீலலிதா பரமேஸ்வரியாகும்
சிவஹரி ஐக்கியம் ஸ்ரீசங்கர நாராயணராகும்
சிவபார்வதி ஐக்கியம் ஸ்ரீஅர்த்த நாரீஸ்வரராகும்
சிவனாரின் ஹரிசங்கமம் ஹரிஹர சம்பவத்திற்காம்.

188. மேனியெங்கும் சாம்பலைத் தரித்திருக்கும் ஸ்வரூபம்
ஞானியான மனோபாவம் நிறைந்திருக்கும் ஸ்வபாவம்
புலியதனை ஆடையாகத் தரித்திருக்கும் நோக்கம்
மலைமகள் துணையுடன் துறவு செய்கோலம்.

189. உருவத்தை மனதளவில் நாம் வருணித்தாலும்
அருவநிலையில் எங்கும் நிறைந்திருப்பார் ஈசன்
அண்டப் பேரொளியாய் விளங்கும் தோற்றம்தனை
இலிங்க உருவமாகக் கண்டிருப்பார் மேதினியார்.

190. கடந்தநிலையை உருவகப்படுத்தும் அழிக்கும் கடவுள்
கடந்தவர்கள் அடைவது சிவலோகப் பிராப்தமாம்
ஒவ்வொரு ஜீவாத்மாவும் சிவனாக மாறுவதால்
சிவனை வணங்குதல் நம்முன்னோரை வழிபடுவதாகும்.

191. குருர்பிரம்மா குருர்விஷ்ணு குருத்தேவோ மஹேஸ்வரா
குருவை நினைந்திட்டால் கருமவினை நீங்கிவிடும்
குருவின் அருள்தானே இடுக்கண்களுக்கு காப்பாகும்.
குருவணக்கம் தானே ஹரனாரின் உவப்பாகும்.

192. நமசிவாய எனும்மந்திரம் ஐந்தெழுத்து மந்திரம்
சிவனென்ற மந்திரம் தன்னடக்க நெறியாகும்
சிவாயநம என்று தினமொருமுறை புகலவேண்டும்
கூர்மமென ஐம்புலனை அடக்கி வாழவேண்டும்.

193. சித்தரெல்லாம் நிறைந்திருக்கும் புண்ணிய தலமாகும்
சித்தத்தில் நிறைந்திருக்கும் அண்ணாமலை பதியாகும்
சுத்தமான மனநிலையுடன் கிரிசுற்றும் போதில்
சித்தரெல்லாம் ஆசிதருவார் நல்வாழ்க்கை நெறிக்கே.

194. ஆதிகும்ப ஈஸ்வரன் கும்பகோணத் திருநகரில்
ஊழிக்கால பிரளயத்தில் ஜீவசத்து தனையே
கும்பத்தில் பிரதிஷ்டை செய்து ஜீவராசியெல்லாம்
மங்காமல் நெடுங்காலம் வாழவகை செய்தார்.

195. மலைகளெல்லாம் நிறைந்திருக்கும் மாதேஸ்வர மலையாகும்
மாதாவாக ஈசன்விளங்கி நிறைகின்ற இடமாகும்
வனங்களெல்லாம் சூழ்ந்துநின்று இருக்கும் மலையாகும்
சனங்களெல்லாம் சிவராத்திரியில் சூழ்கின்ற வனமாகும்.

196. செம்பொற் சோதிஈஸ்வரனை நாம் காணவேண்டில்
தம்மனதில் பரிபூரண பக்தியுடன் ஆசாரத்துடன்
மும்மலமும் அகற்றிட்டு அருள் யாக்கையுடன்
அங்கைகூப்பி அகங்குளிர வணங்க வேண்டும்.

197. தந்திடுவான் எப்பொழுதும் நல்லாசி தனையே
தள்ளிடுவான் கருமவினை துக்கங்களையே
சகஸ்ர லிங்கங்களைக் கண்டிடலாம் விரும்பினால்
கர்நாடக மண்ணிலும் காளிமாதா பூமியிலும்.

198. ஞாலம் முழுதும் சுற்றிவந்தான் ஷண்முகநாதன்
ஞாலத்தினை அம்மை யப்பராக மாற்றிவிட்டார்
வேழமுகன் சொன்ன தத்துவமும் நன்று
ஆறுமுகன் சொன்ன தத்துவமும் நன்று.

199. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரி தானவன்
நட்டாற்றில் குடிகொண்ட தெய்வீக நாதன்
செங்கோட்டு வேலவனின் தந்தையான ஈசன்
ராமநாதனாக கோலோச்சுகிறான் மனமென்னும் கோயிலில்.

200. நந்திதேவரின் மேல்நடனமாடும் நமச்சிவாயன்
முந்திவரும் வாழ்க்கையை சீரமைப் பாராம்
பந்தபாசம் தனைக்கடந்து மேலான நெறியில்
உந்திசெல்வர் நம்மையே வீடுபேறடையவே.

201. நானென்ற உணர்வு சுட்டுப் போனபின்பாக
யாமென்ற அறநெறி விளைந்த பிறகாக
ஓமென்ற பிரணவத்தை நாம் தேடிச்சென்றால்
ஆமென்று உரைத்து ஞானவழி அளிப்பாரே.

202. வரம் தருவாய் மயிலாபுரி கபாலஈஸ்வரனே
சிரம் தாழ்த்தினேன் கருணைபுரி ஆசீர்வதியெனையே
எடுத்த பொற்பாதம் அபிநய சுந்தரனாய்
கொடுத்திடுவாய் அஷ்ட அயிஸ்வர் யங்களையே.

203. மஹாதேவ மலையிலே வாசம் கொண்டிருப்பாய்
சுஹானுபவ நிலையில் த்யானத்தில் ஆழ்ந்தாய்
சிவராத்திரி யன்று உனைநான் பூசிப்பேன்
நவரத்தி னங்களையும் எனக்குநீ தந்திடுவாய்.

204. பாலாபிஷேகம் செய்து உனை வணங்கிட்டேன்
மாலைகள் வாசைன மலர்களால் அருச்சித்தேன்
அந்திசாயும் போதில் நந்திதேவரின் ஆசியுடன்
மந்திரங்கள் சொல்லிநான் தண்ட னிட்டேன்.

205. ராமனாகப் பிறந்திட்டான் கார்மேக வள்ளல்
சோமநாதன் ராமனுக்கு பக்திதன்னை மேவிட
ராமநாமம் இயம்பும் பக்த அனுமனாகவே
காசினியில் பிறந்திட்டான் கேசரியின் மகனாக.

206. அனுமனே திருருத்திரனென்று யாருமே அறியார்
மனுநீதி தன்னைக் காக்கமால் தோன்றியுலகில்
பூமகளை மணந்து ஆதிசேட இலக்குவனுடனே
பூபாரம் விலக்கிட்டு உலகினையே காத்தான்.

207. தக்ஷிணக் கடவுளாய் நமதுகுரு தோன்றி
தக்ஷிணேஷ்வரராகி ஆதிசங்கரருக்கு அருள
கோவிந்தவாடி யெனும் குருஸ்தலம் தன்னில்
மேவிதான் வாணிமூலம் உபதேசம் செய்தார்.

208. பட்டமங்கலம் என்றொரு புண்ணியதலமாம்
கல்லால மரம்தான் விழுதுகள் மிகுந்து
கார்த்திகைப் பெண்டிர்க்கு சாப நீக்கமளித்த
தக்ஷிணா மூர்த்தியவர் தவம்செய்யும் இடமாம்.

209. திருஆலங்குடிப் பட்டிணம் சோழ வளநாட்டில்
திருப்பொன்னிநதி சுழித்துவலம் வருமிடமாம்
விபத்தினைத் தடுத்திடுவார் ஆபத்சஹா யேஸ்வரர்
சுபத்தினை யளித்திடுவார் தெற்குநோக்கி யமர்ந்தே.

210. பாதாள சிவலிங்கம் ஈசான மூலையிலே
மாதேஸ்வர மஹாதேவர் திருவருணைத் தலத்தினிலே
ரமணமகா சித்தரும் சமாதிநிலை யதனை
பாதாள லிங்க சன்னதியில் கண்டுவிண்டாரே.

211. திருத்திட்டையெனும் புண்ணியதலம் தஞ்சை யருகில்
வருத்திடும் பாவங்களைப் போக்கிடும் இடமாம்
பன்னிரு திங்களும் ஈசன்முடி மேல்சொரியும்
தண்ணீரே கங்கைமுடி யதனைக் காட்டிடுமாம்.

212. மகாமகம் திருநாளில் கும்பநகர் செல்வீர்
மஹாநதிகள் கங்கை யமுனை சரஸ்வதியாம்
கும்பகோண இறைவனை அபிஷேகம் செய்ய
தும்பும் குளத்திற்கே வந்து வழிபடுமாம்.

213. உமையவள் திருமணக்கோலம் திருமணஞ் சேரியில்
எமையாளும் ஈசன் அமர்ந்த கோலத்தில்
இளையபிராய மகளிரும் ஆடவர் வந்திருந்து
களைந்திடுவர் தோஷமதை வதுவை அடைந்திடுவர்.

214. ஏகாந்த நிலையிலே ஈசனை வேண்டுவோம்
மோகமெல்லாம் களைந்த பக்திநிலை அடைவோம்
ஈசனுடன் இரண்டறக்கலந்த அநுபூதி நிலையடைவோம்
யாசித்து மறுபிறவியில்லாத நிலையை வேண்டுவோம்.

215. சித்துகளெல்லாம் அறிந்தவன் ஈசன் ஒருவனே
சித்தரெல்லாம் ஈசனின் மறுபிறவி களேயாகும்
பரிமாணமே யில்லாத நிலை யோகநிலையாகும்
குருவானவர் ஒருவரே யோகத்தைத் தருவாராம்.

216. பிரம்மனைவிட உயர்ந்தவன் திருமால் அவனே
திருமாலினும் உயர்ந்தவன் ருத்திர மூர்த்தியே
ருத்திரனினும் உயர்ந்தவர் ஸ்ரீசக்தி யன்னையே
சக்தியன்னை யினும் உயர்ந்தவர் ஸ்ரீகுருமூர்த்தியே.

217. ஞாலத்தில் தெய்வமாக குருவைக் காணுவோம்
மால்அயனும் ருத்திரனும் குரு ஸ்வரூபமாம்
குருகடிந்துவிட்டால் வேறு காப்பு இல்லையாம்
மறுபிறவியிலும் இதற்கு மாற்றேதும் இல்லையாம்.

218. காலபைரவர் சன்னதியைக் காசியில் காணலாம்
மேலான மூர்த்தியாம் கொத்தவால் என்பவர்
அவரைத் தரிசித்து வரவில்லை யென்றால்
காசிசென்ற புண்ணியம் வருவதே யில்லையாம்.

219. காலபயிரவர் கபாலபயிரவர் உத்தண்ட பயிரவர்
மார்த்தாண்ட பயிரவர் ஸமஸ்கார பயிரவர்
ஸம்ஹார பயிரவர் என்பவ ரெல்லோரும்
சிவமூர்த்தி அம்சங்களே சக்திகளே யாகும்.

220. அரனாரே வந்திடுவீர் ஆயுளைத் தந்திடுவீர்
பிரத்யக்ஷ ஸ்வரூபமாய்க் காட்சி தந்திடுவீர்
சோதிரூப அய்யனே ஆலிங்கனம் செய்திடுவீர்
தடுத்தாட்கொண்டு பேரின்ப நிலை தருவீர்.

221. அம்மையப்பனே ஆதிமூலனே பரம்பொருளே
அந்தமில்லா சோதியனே ஆலிங்கனம் செய்திடுவீர்
பரபூரண ஆனந்தத்தை அளித்திடுவீர் ஈசனே
குருவாக வந்திடுவீர் சித்தியினைத் தந்திடுவீர்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி.
ஓம் நமசிவாய, ஓம் நமசிவாய, ஓம் நமசிவாய.

## ஆசிரியர் பற்றி குறிப்புகள்

ஆசிரியர். திரு. இரவிச்சந்திரன் (பரிதிமதி) மருத்துவ இயற்பியல் பேராசிரியர். தமிழ்ப்பற்றினாலும் மனதில் உள்ள இறைவனிடம் நம்பிக்கையாலும் பாடல்கள் புனைவதில் ஆர்வம் உள்ளவர். அவர் தமிழ்மண்ணில் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர். பெங்களூர் கித்வாய் புற்றுநோய் மருத்துவக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்து, பிறகு ஓமான் நாட்டில் பேரரசர் மருத்துவக் கழகத்தில் இப்பொழுது பணியாற்றி வருகிறார்.

அவர் மனத்தில் உள்ள சிவபெருமானின் பக்திப் பெருக்கின் பிரவாகமே, இந்த பாமாலையின் தோற்றம். இறைவழிபாட்டின் தத்துவமே பக்திமார்க்கம். இந்த நாடுமுழுவதும் பயணம் செய்து, அங்கிருக்கும் சிவாலயங்களைத் தரிசித்து, உள்ளன்போடு அவர் அடைந்த அனுபவங்களின் தொகுப்பே இந்த அரனாரின் திருவருள் என்ற பாடல் தொகுப்பாகும். நாயன்மார்களின் சிவபக்திக்கு சிறிதும் குறையாத உள்ளன்பினால் உருவான பாமாலைகளைப் படிக்கும் போதும், பணிவன்புடன் மனமுருகி வணங்கும்போதும், உமையொருபாகனான ஈசன் கனிவுடன் அருள்பாலிப்பான் என்பது திண்ணம். அரனார் நடத்திய திருவிளையாடல்கள் சிவனடியார்களை வீடுபேறடையச் செய்வதற்காகவே என்பதை நாம் அறிந்திருக்கிறோம். சிவபெருமானை நினைத்து, அவரிருக்கும் தலங்களை மனதால் தரிசித்து, அவரின் பெருமைகளை மனத்தில் சொல்லோவியமாக சித்தரித்து, மேற்கண்ட சில பாடல்களை, அண்டத்தின் பேரருள் ஈசனே, அவரின் திருவருளைப் பெற நாம் முயற்சி செய்யவேண்டும் என்பதை விவரித்து, மேற்கண்ட பாடல்களைப் புனைந்துள்ளேன். இப்பாடல்களை மனம் ஒன்றிப் படித்து, பரவசம் அடையும் போதில், அந்த அண்ணாமலையப்பர் உண்ணாமுலைத் தாயாருடன் சோமாஸ்கந்தராகக் காட்சி கொடுப்பார் என்று பரீபூரணமாக நம்புகிறேன். ஆரூர் ஈசன் அருள் பாலிப்பார் என்பது திண்ணம். ஈசன் அருளைப் பெறவேண்டி யாவரும் இந்தப் பாமாலைகளை இறைவனுக்கு அணிவிக்க வேண்டும் என்று பக்திநூலை அர்ப்பணம் செய்திருக்கிறார்.

பேராசிரியர். முனைவர். இரவிச்சந்திரன் பெரியாண்டவர் பாமாலை, திருமுருகன் பாமாலை, கற்பக விநாயகர் மணிமாலை, அரங்கனின் திருவருள், அஞ்சனை மைந்தன் பாமாலை என்ற மற்ற பக்திநூற்களையும் எழுதியிருக்கிறார்.

எல்லாம் வல்ல இறைவன் ஆசியளிப்பார் என வேண்டிக்கொள்ளும் அன்புமகன்.

பரிதிமதி

ஆசிரியர் முகவரி

Prof.Dr.R.Ravichandran
F-101, Ram Adithya Apartments,
19/6, Nagappa Street, Pipeline ‘A’Cross,
Malleswaram, Bangalore-560 003.
Email. ravichandranrama@rediffmail.com